DMCOURT KUNNAM

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்**

**அசல் வழக்கு எண். 652/2021**

2024- ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 17.12.2024 – ஆம் நாள் செவ்வாய்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW1 - வது நபரின் வாக்குமூலம் (1969- ஆம் ஆண்டின் 54 வது விதியில் 9- வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.கோ.லோகநாதன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மணிவண்ணன் | தொழில் | : | ஆசிரியர் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : | பொன்னுசாமி | வட்டம் | : | குன்னம் |
| கிராமம் | : | அத்தியூர் | சமயம் | : | – |
| சாதி | : | – | வயது | : | 54/2024 |

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை** :-

1. எனது தாத்தா அண்ணாமலைக்கு எனது அப்பா பொன்னுசாமி, சிற்றம்பலம், அய்யாதுரை ஆகிய 3 மகன்கள் உள்ளார்கள் என்றால் சரிதான். எனது நடு அப்பா சிற்றம்பலம் என்பவர் சொத்துக்களை பிரித்து கொடுக்கவேண்டும் என்று எனது அப்பாவிற்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பிய விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது அப்பாவும் அறிவிப்பு வந்த விபரத்தை என்னிடம் தெரிவித்தாரா என்றால் இல்லை. எனது அப்பா நடை உடையாக இருக்கிறாரா என்றால் இல்லை. 100 நாட்கள் வேலைக்கு செல்கிறாரா என்றால் இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் அறிவிப்பு எனது சித்தப்பாவால் எனது அப்பாவிற்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பில் சர்வே எண். 88/7B பட்டா எண். 526 ல் 0.9 செண்ட்டையும் பாகம் பிரித்து தரக்கோரி கேட்டுள்ளாரா என்றால் ஆமாம்.

2. என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் எனது அப்பாவிற்கு சில அயிட்ட சொத்துக்களும் எனது சித்தப்பாக்களுக்கு சில அயிட்ட சொத்துக்களும் ஒதுக்கபட்டுள்ளது என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன்.எ னது அப்பாவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்துக்களின் சர்வேஎண் தெரியுமா என்றால் சரியாக ஞாபகம் இல்லை. அதே போல் எனது நடு அப்பா சிற்றம்பலத்திற்கு எந்தெந்த சர்வே எண்கள் ஒதுக்கப்பட்டது என்று தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. அதே போல் எனது கடைசி சித்தப்பா அய்யாதுரைக்கும் எந்தெந்த சர்வே எண் ஒதுக்கப்பட்டது என்று தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை.

3. எனது தாத்தா எனது அப்பாவிற்கு எழுத்துமூலமாக சில சொத்துக்கள் பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டுள்ளாரா என்றால் இல்லை. அதேபோல் சோனாசலத்திற்கு எந்த சொத்துக்களும் பாத்தியப்பட்டது அல்ல என்பதை காட்டுவதற்கு ஆவணங்கள் எதையாவது நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால்

இல்லை. 25.07.1982 ம் ஆண்டு ஊர் மக்கள் முன்னிலையில் பஞ்சாயத்து நடைபெற்றது என்ற விபரம் தெரியுமா என்றால் அவ்வாறு எதுவும் நடைபெறவில்லை. எங்களது ஊரில் எங்களது குடும்பத்தை நாயனார் குடும்பம் என்று குறிப்பிடுவார்கள் என்றால் சரிதான். கிராம பஞ்சாயத்தில் 25.07.1982 ம் தேதி ஒரு பாக முச்சலிக்கா ஏற்பட்டுள்ளது என்றாலும், அதில் பாக சீட்டு எழுதப்பட்டு அதில் ஸ்டாம்ப் ஒட்டப்பட்டு அதில் எனது அப்பா மற்றும் சித்தப்பாக்கள் அந்த ஸ்டாம்பின் மீது கையெழுத்து செய்துள்ளார்கள் என்றால் அவ்வாறு ஆவணம் எதுவும் ஏற்படவில்லை.

4. எனது அப்பாவை விசாரித்தால் பாக சீட்டு ஏற்பட்டது உண்மையா இல்லையா என்ற விபரம் தெரியவரும் என்றால் சரிதான். மேற்படி முச்சலிக்காவில் சாட்சி கையெழுத்தாக வே. முருகேசன்–1, ஆ.பெரியசாமி 2, தா. பாவாடை3, மு. மொட்டையன்–4, M. நாயத்தான்–5 ஆகியோர் சாட்சி கையெழுத்து போட்டுள்ளார்கள். மேற்படி ஆவணத்தில் நெட்டெழுத்து சின்னசாமி ரெட்டியார் செய்துள்ளார் என்ற விபரம் தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது அப்பா பெயருக்கு 12.03.1996 ல் தான் பட்டா பாஸ்புக் ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டா பாஸ்புக்கிற்கு முந்தைய பாஸ்புக் தொலைந்து விட்டதால் மீண்டும் பாஸ்புக் பெறப்பட்டுள்ளது.

5. என்னுடைய முதன்மை வாக்குமூலத்தில் சாலையம்மாளுக்கு $2^{1/2}$ செண்ட் நிலம் வாழ்க்கை பொருள் உதவிக்காக கொடுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதில் எந்த தேதி மாதம் வருடம் சாலையம்மாளுக்கு கொடுக்கப்பட்டது என குறிப்பிடவில்லை என்றால் சரிதான். சோனாசலத்திற்கு அசலாம்பாள் மற்றும் சாலையம்மாள் என இரண்டு மகள்கள் உண்டு என்றால் சரிதான். 29.01.1979 ல் சாலையம்மாள் எனக்கு தாவா சொத்தில் $2^{1/2}$ செண்ட் நிலத்தை தான செட்டில்மென்ட் மூலம் நான் மைனராக இருந்ததால் எனது தந்தையை கார்டியனாக போட்டு கொடுத்துள்ளார் என்றாலும், மேற்படி ஆவணம் எனது தரப்பு பி.வா.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரிதான்.

6. மேற்படி பத்திரத்தில் எனது தகப்பனார் பெயருக்கு சொந்தமாய் அனுபவித்து வந்ததும் எனது தகப்பனார் காலம் சென்றபிறகு எனக்கு சொந்தமாய் அனுபவித்து வருகிற சர்வே எண். 88/7 ல் திட்டம் 0.30 ல் பொன்னுசாமி நிலத்திற்கும் மேற்கு பாதைக்கும் வடக்கு, அசலாம்பாள் நிலத்திற்கும் கிழக்கு, சிவன்கோவில் மானியத்திற்கும் தெற்கு இதற்கு உட்பட்ட டிஸ்மல் $2^{1/2}$ செண்ட் என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 88/7 ஏக். 0.30 செண்ட் நிலத்தில் பழமலைநாயனாருக்கு 0.9 செண்டு வாய்க்கரார் மூலம் கிடைத்த சொத்து ஆகும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பழமலைநாயனார் பாகத்திற்கு கிடைத்த 0.9 செண்ட் நிலத்தில் பழமலைநாயனார் மகன்கள் சோனாசலம் பாகத்திற்கு 4 1/2 செண்ட் நிலமும் அண்ணாமலை பாகத்திற்கு $0.4^{1/2}$ செண்ட் நிலமும் வாய்க்கராராக பிரிக்கப்பட்ட நிலமாகும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சோனாசலம் பாகத்திற்கு பிரிந்த

DMOUNCOURTKUNNAM

சொத்தில் $0.4^{1/2}$ செண்ட் சோனாசலம் மகள்கள் அசலாம்பாள் பாகத்திற்கு $2^{1/4}$ செண்ட் நிலமும் சாலையம்மாள் பாகத்திற்கு $2^{1/4}$ நிலமும் வாய்க்கரார் பாகம் செய்து கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சோனாசலம் மகள் சாலையம்மாள் பாகத்திற்கு பிரிந்த $0.2^{1/4}$ செண்ட் நிலத்தை எனக்கு 29.01.1979 ம் தேதியில் 2 1/2 செண்ட் நிலமென காட்டி எனக்கு தானசெட்டில்மென்ட் பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ரெக்கார்டில் உள்ள விபரங்கள் மட்டும் எனக்கு தெரியும். 29.01.1979 ம் தேதியிட்ட தான செட்டில் மென்ட் பத்திரம் எனது தரப்பில் பி.வா.சா.ஆ 7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8. சோனாசலம் மகள் அசலாம்பாள் பாகத்திற்கு பிரிந்த $0.2^{1/4}$ செண்ட் நிலத்தை அசலாம்பாள் மகள்கள் மனோரஞ்சிதம்–1, மீனாம்பாள்–2 ஆகியோருக்கு தாவா சொத்தில் $0.2^{1/4}$ செண்ட் நிலத்தையும் இதர சொத்துக்களையும் 08.06.1979 ம் தேதியில் தானசெட்டில் மெண்ட் பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்றால் நீதிமன்றத்திற்கு வந்தபிறகுதான் மேற்படி விபரம் எனக்கு தெரியும். எனது தாத்தா அண்ணாமலைக்கு பிரிந்த 0.41/2 செண்ட் நிலத்தை அண்ணாமலை மகன்கள் பொன்னுசாமிக்கு $0.1^{1/2}$ செண்ட் , சிற்றம்பலத்திற்கு $0.1^{1/2}$ செண்ட், அய்யாதுரைக்கு $0.1^{1/2}$ செண்ட் வீதம் வாய்க்கரார் மூலம் பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது அப்பா எனது பெயருக்கு 02.02.2018 ம் தேதியில் எழுதி வைத்த கிரய பத்திரம் $0.1^{1/2}$ செண்ட்டிற்கு மட்டுமே எழுதி வைக்க முடியும் என்றால் சரியல்ல. 9 செண்ட் நிலம் எழுதி வைக்க எனது அப்பாவிற்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல.

9. 29.01.1979 ம் தேதியில் பி.வா.சா.ஆ 7 ன்படி $2^{1/2}$ செண்ட் எழுதி வைத்திருக்கும்போது அந்த சொத்தையும் சேர்த்து மீண்டும் எனக்கு கிரயம் கொடுக்க எனது தந்தைக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் மீனாம்பாளுக்கு $1^{1/4}$ செண்ட்டும் மனோரஞ்சிதத்திற்கு 0.1 செண்ட்டும் கிடைத்த சொத்தை எனது தந்தை எனக்கு கிரயம் எழுதி வைக்க உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. சிற்றம்பலம் பாகத்திற்கு பாத்தியப்பட்ட $0.1^{1/2}$ செண்ட் நிலத்தையும் அய்யாதுரைக்கு பாத்தியப்பட்ட $0.1^{1/2}$ செண்ட் நிலத்தையும் சேர்த்து எனக்கு கிரயம் எழுதி கொடுக்க எனது தந்தைக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல.

10 மனோரஞ்சிதம்–1, மீனாம்பாள்–2, சிற்றம்பலம் 3, அய்யாதுரை–4 ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தையும் சேர்த்து 02.02.2018 ம் தேதியில் எனக்கு கிரயம் கொடுக்க எனது தந்தைக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. 02.02.2018 ம் தேதி கிரய பத்திரம் ரத்து செய்யவேண்டிய கிரய பத்திரமாகும் என்று சொன்னால் சரியல்ல.

(வாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதிற்கிணங்க வழக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது. )

Taken Court by in Open Court read and to the witness andTAU-Marutham admitted by the witnesses to be correct.

District Munsif - Cum - Judicial Magistrate,
Kunnam.

DMCUMJM COURT, KUNNAM